# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 05.07.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு கவிதை வரி இவ்வாறு வருகிறது: கருணை காட்டக் கூடியவனே! உனக்கு எவ்வாறு நன்றி செலுத்துவேன். இந்த பணியைச் செய்யக்கூடிய நாவை எங்கிருந்து கொண்டு வருவேன்.

அல்லாஹ்வின் அருள்களுக்கும், கருணைகளுக்கும் நன்றி செலுத்துவது என்பது சாத்தியமற்றதாகும். நான் செய்யக்கூடிய ஒவ்வொரு பயணமும், தனது கோணத்தில் அல்லாஹ்வின் அருளையும், கருணையையும் கொண்டதாக இருக்கின்றது.

கடந்த நாட்களில் ஜெர்மனியின் ஆண்டு மாநாடு நடைபெற்றது. அதில் நான் கலந்து கொண்டேன். அங்கும் மாநாட்டைத் தவிர அல்லாஹ்வின் அருள் மற்றும் கருணையின் எப்படிப்பட்ட காட்சியைக் கண்டோம் என்றால், அதன் மூலம் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் செய்த வாக்குறுதிகளை ஒவ்வொரு நாளும் புதிய பொலிவுடன் நிறைவேற்றுகின்றான் என்ற நம்பிக்கை மேலும் வலுவடைகின்றது.

ஜெர்மனியின் அமீர் சாஹிப் அவர்கள் என்னிடம், நான் பார்ப்பது எனது மற்றும் எனது நண்பர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது எனக் கூறினார்கள். ஜெர்மனியிலுள்ள மக்களுக்கு, அங்குள்ள ஊடகங்களுக்கு, முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு ஆர்வம் ஏற்பட்டது. பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டு விழாக்களும் நடைபெற்றன. பள்ளிவாசல் திறப்பு விழாக்களும் நடைபெற்றன. முன்பை விட அதிகமாக உள்ளூர் மக்கள் ஆர்வம் காட்டினர். அமைப்பாளர்களிடமும் ஆர்வம் இருந்தது. படித்த மக்களின் ஆர்வமும் தென்பட்டது. மேலும் கிறிஸ்தவ ஆலயங்களின், பாதிரிமார்களின் ஆர்வமும் தென்பட்டது. பின்னர் ஆண்டு மாநாடு நடைபெற்றது. அதிலும் அல்லாஹ்வின் அருளின் காட்சிகளை முன்பை விட அதிகமாக காண முடிந்தது. எவ்வாறிருப்பினும், மனித சிந்தனையினால் அல்லாஹ்வின் அருளை அளவிட முடியாது. குறைந்தபட்சம் அங்கு நடைபெற்ற விசயங்களுக்கு முன்பு, ஜெர்மனி ஜமாஅத்திற்கு இந்த வருடம் ஏற்பாடுகள் சிறந்த முறையில் இருக்கும் என்றும், மக்களிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது. ஆனால் இந்த அளவு விசாலமான ஏற்பாடுகளை விட, எதிர்பார்ப்புகளை விட அதிகமாக அல்லாஹ் அருள் புரிவான் என்ற எண்ணம் அவர்களுக்கு தோன்றவில்லை.

தற்போது எனது வழக்கத்திற்கேற்ப ஒன்று, அல்லாஹ்வின் அருள்களைப் பற்றி சிலவற்றைக் கூறுவேன். பயணத்தின் நிலைமைகளைப் பற்றி கூறுவேன். இரண்டாவது, மாநாட்டின் சேவகர்களுக்கு நன்றியும் செலுத்தப்படும். அதனைப் பற்றியும், மாநாட்டின் ஏற்பாட்டைப் பற்றியும் கூறுவேன்; நன்றியும் செலுத்துவேன். நான் அங்கு சென்ற பயணம் மிகவும் சிறிய பயணமாகும். 10 நாட்களுக்கான பயணமாகும். அங்கு அவர்கள் இந்த நாட்களில் இரண்டு பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டப்படுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். இரண்டு பள்ளிவாசல்கள் திறக்கப்பட்டன. மேலும் அல்லாஹ்வின் அருளினால் பள்ளிவாசலின் நிகழ்ச்சிகள் மாபெரும் வெற்றி அடைந்தது. இதன் மூலம் இஸ்லாத்திற்கான பிரச்சாரம் செய்ய வாய்ப்பு கிடைத்தது. பள்ளிவாசல் மூலம் அங்குள்ள மக்களிடம் இருந்த சந்தேகங்கள் விலகின.

அதில் ஒரு பள்ளிவாசல் மஸ்ஜிது ஸுப்ஹான் ஆகும். மார்பில்டனில் அதற்கான அடிக்கலை நாட்டினேன். ஃபுலோர்ஸேமில் மஸ்ஜிது பைத்துல் அதா திறக்கப்பட்டது. இந்த பள்ளிவாசல் முதலிலேயே கட்டப்பட்ட ஒரு கட்டடமாக இருந்தது. பிறகு தற்போது இது பள்ளிவாசலாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

அல்லாஹ்வின் அருளினால் ஜமாஅத் உறுப்பினர்கள் இதனை பள்ளிவாசலாக மாற்றுவதற்கு 7 ஆயிரம் மணி நேரம் வகார அமல் செய்துள்ளார்கள். அடுத்து நியுவெல்ட் உடைய மஸ்ஜிது பைத்துர் ரஹீம் திறக்கப்பட்டது. போல்டாவில் மஸ்ஜிது பைத்துல் ஹமீது பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த அனைத்து நிகழ்ச்சிகளிலும், அங்குள்ள பல்வேறு விருந்தினர்கள், உள்ளூர்வாசிகள், மேயர், அதிகாரிகள், அரசியல் வாதிகள் மற்றும் பல்வேறு இடங்களிலிருந்து மார்க்கப் பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

மஸ்ஜிது பைத்துல் அதா அமைந்துள்ள புலோர்ஸைம் பகுதியின் மாநிலச் செயலர் டாக்டர் ஹஸி டோல்ப் தனது உரையில்,

முதலில் வாழ்த்துச் செய்தியைக் கூறினார். பிறகு டிசம்பரில் நான் ஜாமிஆவின் திறப்பு விழாவிலும் கலந்து கொண்டுள்ளேன் என்றும், 1959-ல் மஸ்ஜிது நூர் திறப்பு விழாவை அவர் எடுத்துரைத்தார். பிறகு ஜமாஅத் மற்றும் இஸ்லாமிய போதனைகளைப் பற்றியும், அஹ்மதிகளின் நடைமுறையைப் பற்றியும் கூறினார். பிறகு அவர் நான் உங்களது ஜமாஅத்திற்கு மிகவும் கண்ணியம் அளிக்கின்றேன். எங்களுடன் சேர்ந்து நீங்கள் பணியாற்றுவதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். என்றும் கூறினார். மேலும் இஸ்லாத்தின் அழகிய முகத்தை பொதுமக்கள் வரை கொண்டு வரக்கூடிய நிகழ்ச்சிகளை நடத்தியதற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதில் Charity Walk தெருக்களை தூய்மைப்படுத்துவது, சிறுவர் அமைப்புகளுக்கு உதவி செய்வது, வகாரே அமல் போன்றவைகள் உள்ளன என்று அவர் கூறினார்.

இதுபோன்று பல்வேறு செய்திகள் உள்ளன. அவற்றில் நான் ஒருசில சம்பவங்களை நடுவிலிருந்து எடுத்துள்ளேன். இந்த பள்ளிவாசலின் திறப்பு விழாவின் போது ஏறக்குறைய 270 ஜெர்மன் விருந்தினர்கள் கலந்து கொண்டனர். மேலும் பல்வேறு பகுதிகளிலுள்ள மேயர்கள், மாநிலச் செயலர்கள், ஒரு அரசியல் கட்சியின் துணைச் சேர்மன், தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள், கிறிஸ்தவ ஆலயத்தின் பாதிரிகள் அல்லது அவர்களது பிரதிநிதிகள், போலீஸ் கமிஷ்னர் மற்றும் நகர கவுன்ஸில் உடைய பிரதிநிதிகள் போன்றோர் கலந்து கொண்டனர். உலக வாழ்வின் பல்வேறு பிரிவுகளுடன் தொடர்பு கொண்டுள்ள நண்பர்களும் கலந்து கொண்டனர்.

மஸ்ஜித் பைத்துல் ஹமீதின் திறப்பு விழாவின் போது அங்குள்ள நகரத்தின் முதல் கவுன்ஸிலர் தனது உரையில் அஹ்மதிய்யா ஜமாஅத் ஃபுல்டா நகரத்தின் பாரம்பரியத்தில் பங்களிக்கின்றது. அது பல வருடங்களாக இங்கு உள்ளது. நான் சமூகத்தின் நலனுக்காக நீங்கள் செய்யக்கூடிய ஒவ்வொரு செயலையும் அறிந்துள்ளேன் எனக் கூறினார். மேலும் நீங்கள் பள்ளிவாசல் கட்டுவது நீங்களும் நகரத்தின் பிரச்சனைகளில் பங்கெடுக்க விரும்புகின்றீர்கள் என்பதன் அடையாளமாகும். எங்களுடைய மொழியில் ஒரு பழமொழி உள்ளது. 'சொல்லிற்குப் பதிலாக செயல்களின் மூலம் மனிதனைக் கண்டறியுங்கள்' என்பதாகும். உங்களிடமிருந்து நல்ல பேச்சுகளை மட்டும் நாங்கள் பார்க்கவில்லை. மாறாக உங்களது செயல்களும் சிறந்ததாகவும் உயர்வானதாகவும் உள்ளது. ஜமாஅத் இந்த நாட்டின் சட்டங்களை மதிப்பது மட்டுமல்லாமல், அதனை பின்பற்றவும் செய்கின்றது என்பது ஒரு நிரூபிக்கப்பட்ட ஒன்றாகும் என்றார். எனவே நாம் எப்பொழுதும் சகிப்புத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும்.

இதனைப் போன்று ஒரு உள்ளூர் விருந்தினர் கூறினார். அவருக்கு வயது 81 ஆகும். அவர் அங்கு எனது சொற்பொழிவையும் கேட்டார். அதன் பிறகு அவர் உங்களுடைய கலீஃபா கூறிய கருத்துகளை எனது வாழ்வில் என்னால் பார்க்க முடியுமா என்பது தெரியாது. அதாவது இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கான விசயங்களைப் பற்றி கூறுகின்றார். ஆனால் நீங்கள் பார்ப்பீர்கள். உங்களது ஜமாஅத்தின் தோற்றுனரைப் பற்றி நான் இணையதளத்தில் படித்தேன். இவர்களது தூதுச் செய்தியை உலகம் ஏற்றுக் கொள்ளும். உண்மையான இஸ்லாம் இவர்கள் மூலமாக வரவும் என்றார். மறுநாள் அவர் மீண்டும் வந்தார். என்னுடைய உள்ளத்தில் உங்களுடைய மார்க்கத்தின் உண்மையை உணர்ந்து விட்டேன். நான் துஆ செய்வதற்காக எனக்கு தொழுகையைக் கற்றுத் தாருங்கள் என்றார்.

நிகழ்ச்சியின் கடைசியில் மாவட்ட கவுன்ஸிலின் தலைவர் அங்குள்ள உள்ளூர் தலைவரிடம் வந்து எங்களது விருப்பம் என்னவென்றால், மாவட்ட தலைமை அலுவலகத்திற்கு உங்களது இமாம் வர வேண்டும். நாங்கள் அன்னாருடைய சொற்பொழிவைக் கேட்டோம். பல்வேறு அரசியல்வாதிகளும் அதனை ஒரு ஒளியூட்டும்

சொற்பொழிவு எனக் கூறியுள்ளனர் என்றார். மேலும் உங்களுடைய ஜமாஅத்தின் இமாமுடைய இந்த சொற்பொழிவு எங்களது அறிவுக்கு ஒளியூட்டியுள்ளது. எங்களது உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார். அங்குள்ள சதர் சாஹிப் அதற்குப் பிறகு மக்கள் தொடர்ந்து பள்ளிவாசலைப் பார்க்க வருகை தருவதாக கூறுகின்றார்கள். பள்ளிவாசல்கள் எங்கெல்லாம் கட்டப்படுமோ அங்கெல்லாம் எப்போதும் தப்லீகிற்கான புதிய வழிகள் திறக்கின்றன. மேலும் அறிமுகமும் அதிகரிக்கின்றது. இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர்கள் அறிக்கையை அனுப்பியுள்ளனர். அதில் இதுவரை 500க்கும் மேற்பட்ட நபர்கள் வந்ததாக கூறுகின்றார்கள். பலரும் இஸ்லாமிய போதனைகளை அறிவதற்கு மிகுந்த ஆர்வம் காட்டியதாக கூறுகின்றார்கள். மேலும் சிலரைப் பார்த்து இவர்கள் வெளியிலிருந்து வந்த விருந்தினர்கள் அல்ல. மாறாக, நமது ஜமாஅத் உறுப்பினர்களைப் போன்று தோன்றியதாக அவர்கள் கூறுகின்றார்கள்.

**ஒரு பெண்மணி தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி எழுதுகின்றார்கள்:**

எனக்கு உங்களுடைய இமாமைப் பார்த்தது மற்றும் அவர்களது சொற்பொழிவைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. கிறிஸ்தவத்தைப் பற்றி பரந்த மனப்பான்மையை வைத்துள்ளீர்கள். மேலும் Love for All, Hatred for None என்ற முழக்கத்தை நாங்கள் பலமுறை கேட்டோம். மேலும் பல்வேறு விசயங்கள், நம்மை பிரிப்பதற்குப் பதிலாக இணைக்கின்றது. மார்க்கத்தைப் பற்றி மனிதன் சிந்தனை செய்வது அவசியமாகும். ஒவ்வொன்றிற்கும் இடையில் மிகப்பெரிய வேறுபாடு இல்லை என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் எனக் கூறினார்.

ஒரு சகோதரர் இவ்வாறு கூறினார்: கலீஃபா முதலில் கொடுத்த தூதுச் செய்தி இஸ்லாம் சமத்துவத்தை விரும்பக்கூடிய மார்க்கமாகும். இது மிகவும் அவசியமான தூதுச் செய்தியாகும். இதனை அவர்கள் மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கின்றார்கள். இவர் இதற்கு முன்பும் நமது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளார்கள்.

அடுத்து ஒரு நண்பர் கூறினார்: எனக்கு மிகவும் சிறந்த உணர்வுகளைத் தரக்கூடியதாக இருந்தது. அதாவது அன்பு, நேசம் போன்ற வார்த்தைகள் திரும்பத் திரும்ப உபயோகப்படுத்தப்பட்டன. நான் சிறந்த Protestant கிறிஸ்தவன் ஆவேன். எங்களுக்கும் புதிய ஏற்பாடு மற்றும் அன்பு மிகவும் முக்கியமானதாகும். ஆனால் நான் இந்த வார்த்தையை இந்த அளவு கிறிஸ்தவ ஆலயத்தில் கேட்டிருக்கின்றேனா? என தெரியவில்லை. இந்த விசயம் என்னை மிகவும் நல்ல தாக்கத்திற்கு ஆளாக்கியுள்ளது. எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தை இந்த அளவுக்கு தெரியாது. எனக்கு இங்கு கிடைத்த அன்பு எல்லா இடங்களிலும் கிடைக்காது. மேலும் எனக்கு இதனை மறைப்பது அவசியமற்றதாகும். இந்த விசயம் எல்லாருக்கும் தெரியும். அதாவது ஜெர்மனியில் இஸ்லாத்தைப் பற்றி பலருக்கும் காழ்ப்புணர்ச்சி உள்ளது. ஊடகங்கள் மூலம் தவறான முகம் காட்டப்படுகின்றது. பெரும்பான்மையான முஸ்லிம்களை தனிப்பட்ட முறையில் எவரும் தெரிந்து வைத்திருப்பதில்லை. எனது எண்ணத்தின்படி இப்படி தனிப்பட்ட தொடர்பு ஏற்படக்கூடிய இடங்கள் மூலம் உண்மையான விசயம் என்னவென்பது தெரிய வந்துவிடும்.

இதனைப் போன்று தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள் நிரூபர்கள் நேர்காணல் எடுத்தனர். அதில் இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் இக்காலகட்டத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் அவசியம் மற்றும் பள்ளிவாசல்களின் செயல்பாடுகள் குறித்த கேள்விகள் கேட்கப்பட்டன. இதைப்போன்று ஏறக்குறைய ஒட்டுமொத்தமாக 30 செய்தித்தாள்கள், 3 ரேடியோ நிலையங்கள், 5 டி.வி. சேனல்கள் நமது நிகழ்ச்சிகளை கவரேஜ் செய்தார்கள். ஜெர்மனியின் வரலாற்றில் முதன்முறையாக தேசிய டி.வி.யில் ஜமாஅத்தைப் பற்றிய செய்தி ஒளிபரப்பப்பட்டது. ஜெர்மனியின் மற்றொரு சேனலான ZDF ஃபோல்டா பள்ளிவாசலின் அடிக்கல் நாட்டு விழாவைப் பற்றி ஜுன் 27ம் தேதி செய்தியை ஒளிபரப்பியது. ஏறக்குறைய 3 நிமிடங்கள் அது செய்தியை ஒளிபரப்பியது. அதில், பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டியது பற்றியும், அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றியும் அறிமுகம் செய்யப்பட்டது.

பிரிண்ட் மீடியா, செய்தித்தாள் மூலம் ஏறக்குறைய ஒட்டுமொத்தமாக 12 இலட்சம் பேர் வரை தூதுச் செய்தி எட்ட வைக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய டி.வி.யின் கவரேஜ் மூலம் முழு ஜெர்மனியிலும் எனது படத்துடன், ஜமாஅத்தின் அறிமுகமும், தூதுச் செய்தியும் எட்ட வைக்கப்பட்டது. International T.V. ZD. இது ஜெர்மனி,

ஆஸ்திரியா மற்றும் சுவிட்சர்லாந்தின் ஒருங்கிணைந்த டி.வி. சேனல் ஆகும். இந்த டி.வி.யில் மாநாட்டைப் பற்றிய செய்தி ஒளிபரப்பானது. இதன்படி டி.வி. மூலம் 3 நாடுகளில் ஜமாஅத்தைப் பற்றிய தூதுச் செய்தி எட்ட வைக்கப்பட்டது. இதனை ஜெர்மனி ஜமாஅத் எதிர்பார்க்கவே இல்லை.

**மீன்ஸ் ஸ்பிரிக் என்ற பத்திரிகை:** கலீஃபத்துல் மஸீஹ் தமது சொற்பொழிவில், நாங்கள் தற்போது பள்ளிவாசல் கட்டிய இடம் முதலில் மார்க்கெட் ஆக இருந்தது. அங்கு பல்வேறு பொருள்கள் பணத்திற்குப் பதிலாக கொடுக்கப்பட்டன. அவை உடல் தேவைக்காக இருந்தது. இப்போது பள்ளிவாசலிலும் வாங்கவும், விற்கவும் செய்யப்படுகின்றது. ஆனால் இலவசமாக பொருள்கள் கிடைக்கின்றன. இங்கு ஆன்மீக பொருள்கள் கிடைக்கின்றன எனக் கூறியதாக அது எழுதியிருக்கின்றது.

பிறகு சந்தாவைப் பற்றி கூறினேன். ஜெர்மனியில் ஜமாஅத்திற்கு அரசு அங்கீகாரம் கிடைத்து விட்டது. அங்கு ஜமாஅத் தனது பள்ளிக்கூடத்தையும் திறக்கலாம். மேலும் பல்வேறு நிகழ்ச்சிகளையும் நடத்தலாம். ஆனால் கிறிஸ்தவ ஆலயத்திற்காக ஓரளவு வரியும் வசூல் செய்யலாம் என்றனர். அதற்கு நான் அவரிடம் ஜமாஅத் சந்தா கொடுக்கின்றது. மிகவும் மகிழ்ச்சியுடன் கொடுக்கின்றது. இந்த பள்ளிவாசலையும் தியாகம் செய்துதான் ஜமாஅத் கட்டியிருக்கின்றது. எனவே எங்களுக்கு எவ்வித வரியும் அவசியமில்லை. இந்த வகையில் எங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து எந்த உதவியும் தேவையில்லை. மக்களை கட்டாயப்படுத்தவும் தேவையில்லை. அல்லாஹ்வின் அருளால் நமது அஹ்மதிகள் தாமே தியாகம் செய்து அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காகவும் ஜமாஅத்திற்காகவும் தியாகம் செய்கின்றனர். பள்ளிவாசலுக்காகவும் செலவு செய்கின்றனர் என்றேன்.

ஒரு விருந்தினர் எழுதியிருக்கின்றார்: கிலாஃபத்திற்கும் ஜமாஅத்திற்கும் இடையிலுள்ள தொடர்பு மற்றவர்களுக்கும் அதிகமாக தெரிய வருகின்றது. அவர் எழுதுகின்றார்: அஹ்மதிகள் தமது கலீஃபாவுடன் கொண்டுள்ள அன்பிற்கான உதாரணம் உலகத் தொடர்புகளில் காணக் கிடைக்காது. அஹ்மதிகளுக்கு தமது கலீஃபாவை அருகில் பார்ப்பது ஒரு உன்னதமான, எடுத்துரைக்க முடியாத ஓர் உணர்வு ஆகும்.

இதைப்போன்று கிலாஃபத்திற்கு ஜமாஅத்துடனும், ஜமாஅத்திற்கு கிலாஃபத்துடனும் உள்ள தொடர்பினை மற்றவர்களும் உணர்கிறார்கள். பலரும் இதனை வெளிப்படுத்தியுள்ளனர். சில விவரங்கள் ஒன்றுபோல் தான் உள்ளது. பலரும் அனுபவங்களையும் தாக்கங்களையும் எழுதியுள்ளனர். அவற்றை நான் விட்டு விடுகின்றேன்.

நான் அவர்களிடம் ஜமாஅத் மற்றும் இஸ்லாத்தின் போதனை என்னவென்றால், ஒவ்வொரு மதத்தையும் கண்ணியத்துடன் பார்க்க வேண்டும். இதுவே எமது போதனையாகும். இந்தப் பள்ளிவாசல் இந்த நோக்கத்தை நிறைவேற்றக்கூடியதாக இருக்கும் எனக் கூறினேன். இதனை பத்திரிகையில் அதிகமாக கோட்டிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். இதனைப் போன்று இன்டர்நெட்டிலும் தனது Website –ல் நூற்றுக்கணக்கில் பள்ளிவாசலின் படத்தையும், தூதுச் செய்தியையும் வெளியிட்டு இருக்கின்றார்கள்.

இவ்வாறு பள்ளிவாசலின் மூலம் பல்வேறு இடங்களில் தப்லீக் பணி நடைபெற்றது. மாநாடு மூலமாக நடைபெற்ற தப்லீக் அறிக்கை இதுவாகும். இவ்வருடம் பிரான்ஸ், பெல்ஜியத்திலிருந்து வந்திருந்த புதிய அஹ்மதிகள் தப்லீகின் கீழுள்ள நண்பர்களைத் தவிர மால்டா, அஸ்டோனியா, ஐஸ்லாந்து, லத்வேனியா, ஹஸ்ரி, லேட்வியா, ரஷ்யா, தாஜ்கிஸ்தான், கிரிகிஸ்தான், கோஸோவோல், அல்பானியா, பல்கேரியா, மெஸிடோனியாவிலிருந்து ஒரு குழுவும் வந்திருந்தது. இதில் முஸ்லிம் அல்லாத நண்பர்களும் அடங்குவர். ஜமாஅத்துடன் அனுதாபம் கொண்ட மக்களும் வந்திருந்தனர். தப்லீகின் கீழுள்ளவர்களும் வந்திருந்தனர். அஹ்மதிகளும் கலந்து கொண்டனர். பல்கேரியாவிலிருந்து 80 பேரைக் கொண்ட ஒரு பெரிய குழு வந்திருந்தது. மெஸிடோனியாவிலிருந்து 53 பேரைக் கொண்ட ஒரு குழு வந்திருந்தது. அதில் 15 கிறிஸ்தவர்களும், 10 அஹ்மதி அல்லாதவர்களும், 22 அஹ்மதிகளும் அடங்குவர். 1000 மைல் பயணம் செய்து இவர்கள் வந்திருந்தனர். மாநாட்டின் நிகழ்ச்சிகள் மூலம் எல்லையில்லாத அளவுக்கு தாக்கத்திற்கு ஆளானோம் என்று ஒவ்வொருவரும் கூறினர். அஹ்மதிகள் உணர்வுப்பூர்வமாக தூய மாற்றத்தை ஏற்படுத்தியது எனக் கூறினர். மற்றவர்கள் இப்படிப்பட்ட காட்சியை வேறெங்கும் பார்த்ததில்லை எனக் கூறினர்.

ஜெர்மனியின் மாநாடு குறிப்பாக ஐரோப்பா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு தலைமையகமாக அமைந்துள்ளது. அல்லாஹ்வின் அருளால் அங்கிருந்து பல்வேறு நாடுகளிலிருந்த மக்கள் வருவதும் போவதும் மூலமாக தப்லீக் மைதானமும் விரிந்து கொண்டே செல்கிறது.

பொதுவாக பெரும்பாலான மக்களிடம் எப்போதும் ஏற்படக்கூடிய தாக்கம் என்னவென்றால், சிறுவர்கள் தண்ணீர் கொடுப்பதும், சேவை செய்வதும், முதியவர்களுக்கு தொண்டு செய்வதும், ஒரு அமைப்பின் கீழ் அனைத்து பணிகளும் நடப்பது தொடர்பாக ஒவ்வொருவரும் தாக்கத்தை வெளிப்படுத்துகின்றனர். சிலர் இதனைப் பார்த்து இது எங்களுக்கு ஆச்சர்யமூட்டக்கூடியதாக உள்ளது எனக் கூறினர்.

மெஸிடோனியாவிலிருந்து வந்திருந்த அமிலிஜா திராஜா சாஹிபா. இவர் கிறிஸ்தவ பெண்மணி ஆவார். இவர் அங்கு ஆங்கில புரொஃபொஸர் ஆக உள்ளார். இவர் தனது தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்:

நான் மாநாட்டில் முதன் முறையாக கலந்து கொண்டுள்ளேன். அங்கு ஒவ்வொரு விசயமும் ஓர் அமைப்பின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டு நடைபெற்றது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் மற்றவர்களுக்கு உதவி புரிந்து கொண்டிருந்தனர். இதன் மூலம் உங்களது ஜமாஅத் உயர்வான அந்தஸ்தில் உள்ளது என்பது தெரிய வந்தது.

அடுத்து எழுதுகிறார்: உங்களுடைய இமாமுடைய சொற்பொழிவைக் கேட்ட பிறகு தான் இஸ்லாம் என்றால் என்ன? இஸ்லாத்தின் பொருள் அன்பு, கண்ணியம், ஆதரவு, அனைவருக்கும் அமைதி என்பது தெரிய வந்தது. மாநாடு எங்களை மாற்றி விட்டது. நாங்கள் எங்களுக்குள் பல மாற்றங்களை உணர்ந்தோம் எனக் கூறுகின்றார்கள்.

எனவே இவ்வாறு மாநாடு அஹ்மதிகளிடம் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக அல்லாஹ்வின் அருளால் கிறிஸ்தவர்களிடமும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

மெர்ஸிடோனியாவின் ஒரு மருத்துவர் யோஹான் சாஹிப். இவர் ஒரு குழுவுடன் மாநாட்டிற்கு வந்திருந்தார். அவர் கூறினார்: நான் மருத்துவர் ஆவேன். பல்கான் மற்றும் மக்துனியாவில் நடைபெற்ற 3 போர்களில் காயமடைந்தவர்களுக்கு சேவை செய்வதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. சமுதாய வேறுபாடு பார்க்காமல் நான் மக்களுக்கு சேவை செய்தேன். பல்வேறு சமுதாய மக்களை நான் இம்மாநாட்டில் பார்த்தேன். எந்த விதமான வேறுபாடும் இவர்களிடம் தென்படவில்லை. நான் இங்கு கலீஃபாவுடைய சொற்பொழிவைக் கேட்டேன். இதன் மூலம் எனக்கு என்னுடைய சரியான இடம் கிடைத்து விட்டது என உறுதி ஏற்பட்டது. மேலும் நான் இந்த மாற்றத்தை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். அவர் பைஅத் செய்ய முடிவு செய்தார். மாநாட்டின் கடைசி நாளில் அவர் பைஅத் செய்தார்.

அவர் (மருத்துவர்) கூறுகின்றார்: நான் ஹஜ் செய்துள்ளேன். அங்கு முஸ்லிம்கள் எவ்வாறு உள்ளனர் என்பதைப் பார்த்தேன். அங்கு நான் இஸ்லாத்திற்கு மாற்றமான அரசியலைப் பார்த்தேன். முஸ்லிம்களின் சொல்லிலும், செயலிலும் முரண்பாடு இருந்தது. அதிக அளவு அரசியலே இருந்தது. அவர்களுடன் உள்ளம் நிம்மதி அடையவில்லை. ஜமாஅத் கூறக்கூடிய Reform மிகவும் சிறந்ததாகும். ஜமாஅத் எவரையும் இஸ்லாத்தை விட்டு வெளியேற்றுவதில்லை. மாறாக இஸ்லாம் மீதான நம்பிக்கையை அவரிடம் உறுதிப்படுத்துகின்றது. மேலும் அவர் கூறுகின்றார். நான் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டு விட்டேன். எனக்கு இதுதான் ஸிராத்தே முஸ்தகீம் ஆகும்.

அவர் (மருத்துவர்) கூறுகின்றார்: மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது. இவ்வளவு பெரிய கூட்டம். ஆனால் எந்தவொரு போலீஸும் இல்லை. இதனை கண்டும் ஆச்சரியாக இருக்கின்றது. இதன் பொருள் இங்கு எந்த விதமான சண்டையும் ஏற்படாது என அரசுக்கு நம்பிக்கை இருக்கின்றது என்பதாகும்.

அடுத்து அவர் (மருத்துவர்) கூறுகின்றார்: கலீஃபா அவர்கள் எடுத்துரைத்த சில விசயங்களை வேறு எந்தவொரு மவ்லவியிடமிருந்தும் நான் கேட்டதில்லை. நான் உங்களுடன் இருக்கின்றேன் என்பது எனக்கு பெருமையாக இருக்கின்றது. எனக்கு ஒரு கலீஃபா இருக்கிறார் என தெரிய வந்ததும் நான் எனக்கு பாதை கிடைத்து விட்டது என புரிந்து கொண்டேன். ஏனென்றால் நமக்கு கலீஃபா மற்றும் வழிகாட்டியின் தேவை உள்ளது.

**அடுத்து மெர்ஸிடோனியாவைச் சேர்ந்த ஓர் இளைஞர் பாயிரோ. அவர் புதிய அஹ்மதி ஆவார். அவர் எழுதியுள்ளார்:**

இதற்கு முன்பு அவர் முஸ்லிம் ஆக இருந்தார். மேலும் எப்படிப்பட்ட முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தார் என்றால், மவ்லவிகள் தோன்றக் கூடிய குடும்பத்தைச் சேர்ந்தவராவார். அவர் கூறுகின்றார்: எனது பாட்டனார் அஹ்மதி அல்லாத மவ்லவி ஆவார். இவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர் மூலமாக மிகவும் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. எதிர்ப்பின் காரணமாக ஆறு மாத காலம் வீட்டை துறக்க நேரிட்டது. ஆனால் உறுதியாக நிலைநின்றார்கள். அதன் பிறகு அவரது மனைவியும் பைஅத் செய்தார்கள். பிறகு இங்கு மாநாட்டிற்கு வந்திருந்தார்கள். அவர் மெர்ஸிடோனியா மக்கள் எழுதிய ஒரு கவிதையைப் படிக்க அனுமதி கேட்டார். நான் படியுங்கள் என்றேன். இந்த நஸமை அவரும் அவருடன் சில சிறுவர்களும் சேர்ந்து எவ்வாறு படித்தார்கள் என்றால் அதன் மூலம் ஒரு வித்தியாசமான சூழல் ஏற்பட்டது. இதனை M.T.A. குழுவினர் ஒளிபரப்புவார்கள் என நினைக்கின்றேன். அவர்களது குரலும் மிகவும் அழகாக இருந்தது. அவர்களுடன் உள்ளூர் சிறுவர்களும் கலந்து கொண்டனர். அதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றிய புகழும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையைப் பற்றியும் இருந்தது. அவர் எங்களுக்கு மாநாட்டில் நஸம் படிப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என கேட்டதாக கூறினார். ஆனால் அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. எவ்வாறாயினும் அவர் அங்கு நஸம் படித்துக் காட்டினார்.

ஜெர்மனியின் மாநாட்டு ஏற்பாட்டாளர்களிடம் நான் இதனைக் கூற விரும்புகின்றேன். இப்படிப்பட்ட மக்கள் நஸம் படிக்க அனுமதி கேட்டால் அவர்களுக்கு பிறகு படிப்பதற்கு அனுமதி அளியுங்கள். வெறும் உர்து நஸம் மட்டும் படிக்க வைக்க வேண்டும் என்பதல்ல. மாறாக பல்வேறு மக்கள் உள்ளனர். பல்வேறு சமுதாயத்தினர் உள்ளனர். அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். லஜ்னா பகுதியிலிருந்தும் ஜெர்மன் நஸம் படிப்பவர்களுக்கு மிகவும் குறைந்த நேரமே தரப்பட்டது. உருது நஸமே அதிகமாக படிக்கப்பட்டது என புகார்கள் வந்துள்ளன. எனவே அவர்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**அடுத்து பெல்ஜியத்தின் உள்ளூர்வாசி ஒருவர் மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்:**

நான் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கிடையில் ஒற்றுமை, அன்பு, மனிதயின சேவையைக் கண்டு மிகவும் சிறந்த தாக்கத்திற்கு ஆளானேன். நான் இரண்டு வருடங்கள் ஜமாஅத்தின் போதனையை ஆராய்ந்தேன். நான் முஸ்லிம் ஆவேன். ஆனால் யாருக்கும் இதனைப் பற்றி தெரியாது. ஒருநாள் கனவில் பாங்கு சப்தத்தைக் கேட்டேன். நான் தொழுகையின் பக்கம் வர வேண்டும் என அழைக்கப்படுகின்றேன் என நினைத்தேன். அதாவது இஸ்லாத்தின் பால் நான் அழைக்கப்படுகின்றேன் என நினைத்தேன். இன்று நான் ஜெர்மன் விருந்தினரிடம் கலீஃபா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டேன். அவை என்னிடத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. நான் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்து விட வேண்டும் என முடிவு செய்தேன் என்று கூறினார். அவ்வாறே அவர் பைஅத் செய்தார்.

**அங்குள்ள நமது அயாஸ் உஸ்தோ சாஹிப் கூறுகின்றார்கள்:**

மாநாட்டிற்கு முந்தைய நாள் மாலையில் கானாவைச் சேர்ந்த தப்லீகின் கீழுள்ள ஒரு நண்பரை சதர் சாஹிப் ஓரிடத்திற்கு அழைத்து வந்தார்கள். அந்த இளைஞருடைய உள்ளம் ஜமாஅத் தொடர்பாக தூய்மையாக இருப்பது தெரிய வந்தது. ஏறக்குறைய அஹ்மதி என்பது தெரிய வந்தது. ஆனால் அவரிடம் கேட்ட போது நான் தற்போது பைஅத் செய்ய முடியாது. எனக்கு பல்வேறு பிரச்சனைகள் உள்ளன என்றார். அதன் பின்னர் அவர் சென்று விட்டார். பிறகு இரவு அவர் தூங்குவதற்காக வந்த போது மிகவும் உணர்ச்சிப்பூர்வமாக நான் ஜெர்மன் மக்கள் முன்பாக கலீஃபா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டேன். இப்போது நான் அஹ்மதி ஆவதற்கு எந்தக் காரணமும் எஞ்சியிருக்கவில்லை. எனவே நான் பைஅத் செய்ய வந்திருக்கின்றேன் என்றார்.

**ஒரு கிறிஸ்தவ நண்பர் மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் தனது கருத்துக்களை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்:**

நான் கலீஃபாவின் சொற்பொழிவைக் கேட்டேன். மிகவும் அதிக மகிழ்ச்சி ஏற்பட்டது. ஏனென்றால் அவர்கள் சுருக்கமாக மிகவும் விளக்கமாக இஸ்லாமிய கோட்பாடு என்ன என்பதை தெளிவுபடுத்தினார்கள். மேலும் இஸ்லாமிய போதனைகள் என்ன பாடத்தைக் கற்றுக் கொடுக்கின்றன என்பதையும் தெளிவுபடுத்தினார்கள். நான் கிறிஸ்தவர்களிடமும் இதைப் போன்றே தெளிவான மற்றும் நேரான வார்த்தைகளைக் கேட்க விரும்புவேன். ஆனால் பெரும்பாலும் அவ்வாறு இருப்பதில்லை. எங்களில் மிகவும் குறைவானவர்களே தெளிவான மற்றும் நேரான வார்த்தைகளைப் பேசுகின்றனர்.

**ஒரு பெண்மணி கூறுகின்றார்கள்:**

எனக்கு இங்கு வந்த பிறகு புதிய விசயங்களை கற்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பல்வேறு விவரத்தைப் பற்றி இது எனக்கு தெரியும் என நினைத்திருந்தேன். ஆனால் அதனைப் பற்றிய சரியான அறிவு இங்கு வந்த பிறகு தான் புதிய கோணத்தில் தெரிய வந்துள்ளது. மேலும் நான் கலீஃபாவுடைய சொற்பொழிவைக் கேட்டேன். அதிக தாக்கத்திற்கு ஆளானேன். அவர்கள் மிகவும் சிக்கலான மற்றும் கஷ்டமானவற்றைப் பற்றி பேசினார்கள். எப்படிப்பட்ட விவரங்களைப் பற்றி பேசினார்கள் என்றால் Theologian இதனைப் புரிய வைப்பதற்காக பல்வேறு நூல்களை எழுதி விடுவார்கள். ஆனால் அவர்கள் இந்த அனைத்து விவரங்களையும் மிகவும் எளிமையான முறையில் மிகவும் அழகிய கோணத்தில் வெளிப்படுத்தினார்கள். அதன் தரமும் புரியும்படி இருந்தது. கலீஃபா இஸ்லாமிய போதனைகள் மற்றும் இறைவனைப் பற்றி எவ்வாறு எடுத்துரைத்தார்கள் என்றால் ஒவ்வொரு மனிதரும் புரியும்படி அது இருந்தது. எவ்விதமான தப்பெண்ணத்தையும் அது ஏற்படுத்தவில்லை. மேலும் அவர் இந்த ஜமாஅத் முற்றிலும் வேறுபட்டு இருக்கிறது என்று கூறினார்.

**அடுத்து நமது ஓர் அஹ்மதி கூறுகின்றார்:**

ஒரு ஜெர்மன் இளைஞர் ஒருவர் தனது நண்பர்களுடன் என்னிடம் வந்தார். அவர் என்னிடம் நான் கிறிஸ்தவன் ஆவேன் என்றார். அவர் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்த போது அவர் முஸ்லிம்களைப் போன்று பேச ஆரம்பித்தார். ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களது பெயரை மிகவும் ஒழுக்கத்துடனும் கண்ணியத்துடனும் முழுமையாக ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) என்று கூறி வந்தார். அதனுடன் தற்போது தொழுகைக்கான நேரமாகும். நான் உளூ செய்து விட்டு வந்துள்ளேன். காலத்தின் கலீஃபாவின் பின்னால் நின்று தொழ வேண்டும் என்றார். நான் அவரிடம் நீங்கள் ஆரம்பத்தில் தன்னை ஒரு கிறிஸ்தவன் எனக் கூறினீர்கள். ஆனால் உங்களுடைய பேச்சினை வைத்துப் பார்க்கும் போது நீங்கள் ஒரு முஸ்லிம் என தோன்றுகிறதே என்றேன். அதற்கு அவர் கூறினார். எனக்கு ஆறு மாதங்களுக்கு முன்பாக அஹ்மதிய்யதைப் பற்றிய அறிமுகம் கிடைத்தது. Life of Muhammad என்ற நூலை நான் படித்தேன். என்னுடைய பாதிரியிடம் நான் அதைப் பற்றி பேசிய போது, அவரால் எவ்வித பதிலையும் தர முடியவில்லை. எனது உள்ளம் மாறி விட்டது. கிறிஸ்தவத்தை விட்டு விட்டேன். தற்போது முழு கவனமும் இஸ்லாத்தின் பக்கம் உள்ளது. இந்த நூலைப் படித்து நபி (ஸல்) அவர்களைப் பற்றி கொஞ்சம் தெரிய வந்துள்ளது. அல்லாஹ் மற்ற தடைகளையும் அகற்றுவதற்காக துஆ செய்யுங்கள் என்றார்.

**லித்துவேனியாவிலிருந்து ஜெர்மன் மொழியின் ஆசிரியர் காரல் ஹையின்ஸ் வந்திருந்தார். அவர் கூறினார்:**

நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். மேலும் மிக்க மகிழ்ச்சியாக உள்ளேன். முதன்முறையாக ஜமாஅத்தைப் பற்றி மிகவும் விரிவான மற்றும் நல்ல முறையில் அறிமுகம் கிடைத்திருக்கின்றது என்றார். மாநாட்டிற்கு முன்பாக இஸ்லாத்தைப் பற்றி எதிர்மறை எண்ணங்கள் இருந்தன. தற்போது அவை முற்றிலும் மாறி விட்டன. நான் இதைக் குறித்து வைத்துள்ளேன். அதாவது மதங்களுக்கிடையில் பல்வேறு விவரங்கள் ஒன்றுபட்டுள்ளன. உதாரணமாக, இறைவனைப் பற்றிய எண்ணம் மற்றும் இறைவனுடைய கருணை போன்றவை ஆகும் என்றார்.

மேலும் எனது உள்ளத்தில் மக்கள் கை தட்டுதவற்குப் பதிலாக நாரே தக்பீர் என்று ஏன் கூறுகின்றார்கள். மகிழ்ச்சியை வெளிப்படுத்த வேண்டும் என நினைத்தேன். இந்த சந்தேகத்திற்கு ஜமாஅத்தின் இமாம் அவர்கள் சரியான விளக்கத்தைக் கொடுத்தார்கள் என்று எழுதியுள்ளார். அவர் என்னிடம் பேசவும் செய்தார். அவருக்கு திருப்திகரமான பதில் கொடுக்கப்பட்டது. கை தட்டுவது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்காக உள்ளது என்பது உண்மை தான். ஆனால் நாரேவில் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதும் உள்ளது. இறைவனைப் புகழ்வதும் அதில் அடங்கியுள்ளது என்றேன்.

அடுத்து மார்க் முன்தே பெயிலு. இவர் ஒரு கிறிஸ்தவ பாதிரியார் ஆவார். மால்டாவில் மால்டா யுனிவர்சிட்டியில் Phylosopy கற்றுக் கொடுக்கின்றார். இதைத் தவிர உள்ளூர் செய்தித்தாள்களில் கட்டுரைகளையும் எழுதுவார். பிரபலமான பாதிரியாக இவர் அறியப்படுகிறார். கிறிஸ்தவ ஆலயத்தில் பல நுட்பமான கருத்துக்களை எடுத்துரைப்பார். கிறிஸ்தவத்தின் சில கோட்பாடுகளில் கருத்து வேறுபாடும் கொண்டவராவார். இதனை அவர் ஊடகங்களில் வெளிப்படுத்தி வந்தார். இவர் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற நூலைப் படித்திருந்தார். நான்காவது கலீஃபாவுடைய நூலான Islam’s Response to Contemporary Issues யைப் படித்திருந்தார். மேலும் இந்தியாவில் இயேசு என்ற நூலையும் படித்துள்ளார். மாநாட்டில் கலந்து கொண்டதன் மூலம் ஜமாஅத்தைப் பற்றி நேர்மறையான தாக்கத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளது என்று அவர் கூறினார். மேலும் நாங்கள் தற்போது அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு முழுமையான அமைதியினை விரும்பக்கூடிய ஜமாஅத் ஆகும் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம் என்றார். இவர் அலைஸல்லாஹு பிகாஃபின் அப்தஹூ என்ற மோதிரத்தை வாங்கினார். மேலும் இதற்கு என்ன பொருள் என்பதை கேட்டறிந்து, இது எப்படிப்பட்ட வரிகள் என்றால், இதனை எப்போதும் உடன் வைத்திருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். என்னுடன் அவருக்கு சந்திப்பும் ஏற்பட்டது. போப் –ஐப் பற்றி கேள்வி கேட்டுக் கொண்டேயிருந்தார். நீங்கள் எப்போதாவது அவருடன் தொடர்பு கொண்டுள்ளீர்களா? எனக் கேட்டார். அதற்கு நான் ஒருமுறை தொடர்பு கொள்வதற்கு முயற்சி செய்தோம். ஆனால் தொடர்பு கொள்ள முடியவில்லை. மேலும் நான் அவருக்கு உலகில் அமைதியினை ஏற்படுத்துவது தொடர்பாக கடிதம் எழுதினேன். கையில் கொண்டு போய் கடிதம் கொடுத்த பிறகும் கூட அவர் அதனை பொருட்படுத்தவேயில்லை என்று நான் கூறியதும் கேள்வி கேட்பவர் ஏமாற்றத்துடன் சிரித்தவாறு திரும்பி விட்டார்.

இதனைப் பற்றிய ஒரு பழைய சம்பவத்தையும் நான் கூறுகின்றேன். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எனது சிந்தனையின்படி அது அவர்களது முதல் சுற்றுப் பயணம் ஆகும். அது ஃபஸ்ல் பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டப்பட்ட ஆண்டாகும். அப்போது அவர்கள் இத்தாலிக்கும் சென்றார்கள். அங்கு போப் இடம் தொடர்பு கொள்வதற்கு முயற்சி செய்தார்கள். தொடர்பு கொண்ட போது போப் அவர்கள் எனது மாளிகை தற்போது கட்டப்பட்டு வருகின்றது அல்லது பழுது பார்க்கப்படுகின்றது. எனவே உங்களை சந்திப்பது கஷ்டம் எனப் பதிலளித்தார்கள். பத்திரிகை நிருபர்கள் அங்கு வந்திருந்தனர். அவர்கள் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹிடம் தாங்கள் போப் –ஐ சந்திப்பீர்களா? எனக் கேட்டார்கள். அவர்கள், ஆமாம். நான் சந்திப்பதற்கு விருப்பம் தெரிவித்தேன். ஆனால் இது அவர்களது பதிலாகும் என்றார்கள். பத்திரிகையாளர்கள் அதனை அப்படியே தனது பத்திரிகைகளில் வெளியிட்டு விட்டனர். அதாவது போப் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமிற்கு எனது மாளிகையில் கட்டுமானப் பணி நடப்பதால் உங்களை சந்திப்பது கஷ்டம் எனக் கூறி விட்டார்கள் என செய்தி வெளியிட்டனர். மேலும் அதன் கீழ்ப்பகுதியில் அஹ்மதிகளை சந்திப்பதிலிருந்து தவிர்ந்திருப்பதற்காக அஹ்மதிகளின் கலீஃபாவை சந்திப்பதிலிருந்து தவிர்ந்திருப்பதற்காக அவர்களது மாளிகை ஒருபோதும் கட்டப்படாது என்றும் எழுதியிருந்தனர். எவ்வாறாயினும் நாம் நமது பணியை செய்து கொண்டே செல்ல வேண்டும்.

**அடுத்து கிரிகிஸ்தானைச் சார்ந்த ஓர் அஹ்மதி அஷீர் அலி சாஹிப் ஆவார். அவர் கூறுகின்றார்:**

நான் 2007 –ல் பைஅத் செய்தேன். ஆனால் நம்மிடம் பள்ளிவாசல் இல்லை. அஹ்மதிய்யா ஜமாஅத் பள்ளிவாசலில் தொழுவதற்கு எனக்கு ஆசை இருந்தது. அது இங்கு வந்து நிறைவேறியது. அவர் பள்ளிவாசல் திறப்பு விழாவிற்கே வந்து விட்டார். அல்லாஹ் இவ்வாறு அவரது ஆசையை நிறைவேற்றினான்.

அடுத்து காராக்குல்லைச் சேர்ந்த இஸ்மாயில் சாஹிப். இவரும் இங்கு வந்திருந்தார். தான் அஹ்மதி ஆனது குறித்து நன்றி செலுத்திக் கொண்டே இருந்தார். மாநாட்டில் கலந்து கொண்டு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்திக் கொண்டே இருந்தார்.

நைஜரைச் சார்ந்த ஒரு நண்பர் பெல்ஜியத்தில் வசித்து வருகிறார். அவரது பெயர் சாலிஹ் அஹ்மது ஆகும். அவர் முஸ்லிம் ஆவார். அவர் இங்கு வந்தார். நான் ஆப்பிரிக்காவில் பல்வேறு ஆலிம்களின் உரைகளைக் கேட்டிருக்கின்றேன். ஆனால் காலத்தின் கலீஃபா உடைய சொற்பொழிவைக் கேட்ட போது ஏற்பட்ட அந்த தாக்கமும், பலனும் இதற்கு முன்பு எனக்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை. நான் இந்த ஜமாஅத்தை மிகவும் அருகிலிருந்து பார்த்து வந்தேன். நான் இந்த மாநாட்டில் அஹ்மதிய்யத்தில் இணைய முடிவு செய்துள்ளேன். எனவே அவர் பைஅத் செய்தார்.

**இதனைப் போன்றே மராக்ஷியைச் சேர்ந்த நண்பர் ஜம்மூஹி தவப்பீக் சாஹிப். அவர் கூறுகின்றார்:**

நான் ஏனைய தக்லீத் முஸ்லிம்களுடைய தஃப்ஸீர்களையும் படித்துள்ளேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தில் எழுதப்பட்டுள்ள தஃப்ஸீர்களையும் படித்துள்ளேன். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் அன்னாரது கலீஃபாக்கள் எழுதியதுதான் உண்மையான சரியான தஃப்ஸீர்கள் ஆகும். இவ்வாறு அவரது பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டு வந்தது. கூறுகின்றார்: எனக்கு முழுமையான திருப்தி ஏற்பட்டு விட்டது. நான் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டேன். இங்கு மாநாட்டில் வந்து எனது மனைவி மக்களும் பைஅத் செய்து விட்டனர் என்றார்.

அடுத்து நைஜரைச் சேர்ந்த ஒரு நண்பர். இவர் முஸ்லிம் ஆவார். நான் எப்போதும் சிந்தனை செய்து வந்திருந்தேன். அதாவது ஏதாவது ஒரு நபி உயிருடன் இருக்க வேண்டும் என்றால், ஹஸ்ரத் முஹம்மது ரஸூல் (ஸல்) தான் உயிருடன் இருக்க வேண்டும். ஈஸா நபி (அலை) அல்ல என நினைத்து வந்தேன். இங்கு நான் பெல்ஜியம் வந்த பிறகு அஹ்மதிகளுடன் தொடர்பு ஏற்பட்டது. எனது பிரச்சனைக்கு தீர்வு கிடைத்து விட்டது. அதன் பின்னர் தனது நண்பர்களிடமும் இதைப் பற்றி கூறினேன். அவர்களும் இது உண்மை என தெரிகிறது என்றனர். பிறகு கிலாஃபத் மற்றும் அதன் அருள்களைப் பற்றி மிக விரைவாக புரிய வந்தது. எனக்கு இமாமும், தலைவரும் கொண்ட இந்த ஜமாஅத்தை அடைந்தது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இஸ்லாத்தில் எப்போது வரை கிலாஃபத் இருந்ததோ அப்போது வரை முன்னேற்றம் அடைந்தது. இந்த ஜமாஅத்தில் எனக்கு மிகவும் பிடித்தது என்னவென்றால், ஜமாஅத் பெறக்கூடிய ஒவ்வொரு விசயங்களுக்கும் ஆதரவாக எப்போதும் திருக்குர்ஆன், ஹதீஸ்களை ஆதாரமாகக் கொடுக்கின்றது. இவர் முதலில் பைஅத் செய்யவில்லை. கடைசி நாளில் இவர் பைஅத் செய்து விட்டார்.

அடுத்து பாமா தூ சாஹிப். இவர் கிரிகிஸ்தானைச் சேர்ந்தவர் ஆவார். நான் ஆரம்பத்தில் எப்போதாவது காலத்தின் கலீஃபாவைச் சந்திக்க முடியுமா? என சிந்தித்து வந்தேன். இவர் ஏற்கனவே பைஅத் செய்தவர் ஆவார். இவை அனைத்தையும் பார்த்த பிறகு எனது ஈமான் மேலும் வலுவடைந்து விட்டது. கிரிகிஸ்தான் அஹ்மதிகளுக்காக அதிகமாக துஆ செய்யுங்கள். இன்றைய நாட்களில் அவர்களது நிலைமை கடினமாக உள்ளது. மேலும் அங்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள பெயர் தாங்கி ஆலிம்களுக்கு அறிவை வழங்குவானாக! அல்லது அவர்களை பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக!

**லெபனானைச் சேர்ந்த ஒரு புதிய அஹ்மதி கூறினார்:**

ஒருநாள் என்னுடைய 13 வயது மகன் என்னிடம் கூறினார். நீங்கள் எங்களை இறுதிக் காலத்தின் குழப்பத்தினைக் கூறி எப்போதும் பயமுறுத்தி வருகின்றீர்கள். அந்த இறுதிக் காலக்கட்டம் எப்போது வரும் என எங்களுக்கு கூறுங்கள் என்றான். அதற்கு நான் அது வருவதற்கு இன்னும் நூற்றுக்கணக்கான வருடங்கள் உள்ளன என்றேன். அதற்கு எனது மகன் இது தவறாகும். மாறாக நாம் இறுதிக் காலக்கட்டத்தில் தான் உள்ளோம் என்றான். நீங்கள் தஜ்ஜாலைப் பற்றி கூறி வந்தீர்கள். அவன் ஒரு வித்தியாசமான படைப்பு ஆவான். இதுவும் தவறாகும். தஜ்ஜால் என்பது ஒரு மனிதனுடைய பெயரல்ல. மாறாக அதன் பொருள் ஒரு சமுதாயம் ஆகும். அப்படிப்பட்ட தஜ்ஜால் தோன்றி விட்டான். நாம் இறுதிக் காலக்கட்டத்தில் தான் உள்ளோம் என்றான். இதனைக்

கேட்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். மேலும் இந்த விசயங்கள் உனக்கு எங்கிருந்து கிடைத்தது எனக் கேட்டேன். அதற்கு அவன் நான் டி.வி. சேனல்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, ஒருநாள் நான் M.T.A. –வில் ஜெர்மன் ஒளிபரப்பைப் பார்த்தேன். பிறகு நான் அதனை தொடர்ந்து பார்த்து வந்தேன். நான் இந்த விசயங்களை அங்கிருந்து தான் பெற்றேன் என்றான். இதனால் நான் பெரும்பாலும் எனது மகனிடம் இதன் மொழியாக்கத்தைக் கூறு எனக் கேட்பேன். இதுபோன்று அவனிடம் நான் விவாதித்து வந்தேன். இதன்படி ஒருநாள் எனக்கு கடுமையான கோபம் வந்தது. இதற்குப் பிறகு இந்த சேனலை நீ பார்க்கக் கூடாது எனக் கூறினேன். ஆனால் தந்தை உள்ளுக்குள்ளே தனது மகனுடைய கூற்றில் உண்மை இருப்பதாகக் கருதினார். பிறகு மக்களிடம் ஜமாஅத்தைப் பற்றி கேட்டேன். எதார்த்தமாக இரண்டு பாகிஸ்தானிய அஹ்மதிகள் கிடைத்தனர். பிறகு அவர்களிடம் பேசிய பிறகு தனது மகன் கூறியது எனக்குப் புரிய வந்தது. பிறகு அல்லாஹ்வின் அருளினால் அவர் பைஅத் செய்தார்.

**போஸ்னியாவைச் சேர்ந்த ஒரு நண்பர் கூறுகின்றார்:**

இங்கு மாநாட்டிற்கு வந்த பிறகு என்னிடம் ஒரு குறிப்பான மாற்றம் ஏற்பட்டுள்ளது. நான் திரும்பிச் செல்லும் போது இந்த தாக்கம் நிலைபெற்றிருக்க வேண்டும் என்பதற்காக துஆ செய்யுங்கள்.

**இதனைப் போன்று கிரிகிஸ்தானைச் சேர்ந்த மற்றொரு நண்பர் கூறுகின்றார்:**

ஒரு வினோதமான காட்சி இங்கு மாநாட்டில் எனக்கு தென்பட்டது. பிறகு மிகவும் பரிவுடன் என்னிடம் கூறினார். நான் பைஅத் செய்து மிக நீண்ட நாள் ஆகிறது. நான் சில வருடங்களுக்கு முன்பு ஹஜ்ஜிற்கு சென்றிருந்தேன். அங்கிருந்து ஸம்ஸம் நீரைக் கொண்டு வந்தேன். மேலும் காலத்தின் கலீஃபாவைச் சந்திக்கும் போது அதனை கொடுக்க வேண்டும் என நினைத்திருந்தேன். எனவே அவர் தனது அன்பை வெளிப்படுத்தினார். அந்த தண்ணீரை என்னிடம் கொடுத்தார்.

இதனைப் போன்று அல்ஜீரியாவைச் சேர்ந்த ஒரு நண்பர் கூறினார்: இரண்டு மனிதர்கள் முஹாஜிர்களுக்கு தப்லீக் செய்து கொண்டிருந்தனர். நான் அவர்களிடமிருந்து இமாம் மஹ்தியின் வருகையைக் குறித்து செய்தியைக் கேட்டதும் மிகவும் வியப்படைந்தேன். மேலும் இந்த சய்த்தான்கள் வந்ததனால் இங்கிருந்த மலக்குகள் சென்று விட்டனர் என என்னைக் கட்டுப்படுத்த முடியாமல் கூறினேன். ஆரம்பத்தில் நான் அவர்களுடன் ஏளனமாகப் பேசி வந்தேன். ஆனால் எனது ஒவ்வொரு கூற்றும் அவர்களுக்கு முன்பு தவறாகிப் போவதை நான் உணர்ந்தேன். அவர்களிடம் அவர்களுடைய ஒவ்வொரு கூற்றுக்கும் வலுவான ஆதாரங்கள் இருந்தன. பிறகு கட்டாயமாக்கப்பட்டு நான் இவர்களை பற்றி ஏதாவது மவ்லவியிடம் உதவி கேட்டேன் என்றேன். அதன் பின்னர் நான் ஒரு பிரபல்யமான ஒரு அரபி சேனலுக்கு போன் செய்து தொடர்பு கொண்டேன்.

அவர் கூறுகின்றார்: நான் இதற்கு முன்னரும் பல்வேறு கேள்விகள் தொடர்பாகவும் ஃபத்வாக்கள் தொடர்பாகவும் கேட்டு வந்தேன். பலமுறை போன் செய்த போது சரியான பதில் நமக்கு கிடைத்து வந்தது. தற்போது நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி விசாரிப்பதற்காக போன் செய்த போது, அவர்கள் நீங்கள் போனை வையுங்கள் என்றனர். பிறகு அவர்கள் போன் செய்து அஹ்மதிகள் பக்கா காஃபிர் ஆவார்கள். அவர்களிடமிருந்து தவிர்ந்திருங்கள் என்றனர். இது மட்டுமல்ல. மேலும் ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் மூன்று நான்கு முறை அவர்களிடமிருந்து போன் வர ஆரம்பித்தது. ஒவ்வொரு முறையும் ஜமாஅத்திற்கு கொடுக்கப்பட்ட காஃபிர் ஃபத்வாவைப் பற்றி கூறுவார்கள்.

அவர் கூறுகின்றார்: நான் ஜமாஅத் உறுப்பினர்களின் பேச்சைக் கேட்கும் போது இதுதான் உண்மையான ஜமாஅத் எனத் தோன்றும். ஆனால் மவ்லவிகளின் ஃபத்வாக்களைக் கேட்கும் போது பிறகு சந்தேகத்தில் விழுந்து விடுவேன். பிறகு நூல்கள் மற்றும் இணையதளத்தில் ஆதாரங்களைத் தேடி வந்தேன். இதன் மூலம் உண்மை வெளிப்பட்டது. மேலும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. நான் வந்து பார்த்த போது இங்கு பல்வேறு சமுதாய மக்கள் இருந்தன. பிறகு நான் மட்டும் தான் உண்மையாளனா? இவர்கள் அனைவரும் பொய்யரா? என சிந்தித்தேன். அதன் பின்னர் நிம்மதி அடைந்தேன். பிறகு பைஅத் செய்தேன் என்றார்.

**அடுத்து நைஜரைச் சேர்ந்த ஒரு நண்பர் அபு சைய்தி சாஹிப் கூறுகின்றார்:**

நான் மாநாட்டிற்கு வருவதற்கு முன்பு அஹ்மதி ஆகவில்லை. ஆனால் மாநாடு எனது நிலையை மாற்றி விட்டது. நான் இப்போது கூறுகின்றேன். அனைவரும் இந்த ஜமாஅத்தில் இணைந்து விட வேண்டும். ஏனென்றால் இந்த ஜமாஅத் நபி (ஸல்) அவர்கள் தந்த அதே போதனையில் தான் நிலைபெற்றிருக்கிறது. நான் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதைப் பெருமையாகக் கருதுகின்றேன் என்றார்.

**போஸ்னியாவைச் சேர்ந்த ஓர் அஹ்மதி கூறுகின்றார்:**

அவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு பல்வேறு விதமான பாவங்களிலும், தீமைகளிலும் மூழ்கியிருந்தார். ஆனால் மாநாட்டிற்கு வந்த பிறகு அவரது உள்ளம் நிம்மதி அடைந்துள்ளது. அவர் ஒரு தூய வாழ்வு மற்றும் இஸ்லாமிய போதனைகளின்படி வாழ விரும்புகின்றார். மாநாட்டின் சூழலைப் பார்த்து, குறிப்பாக காலத்தின் கலீஃபாவின் உரைகளைக் கேட்டு, இங்கு தொழுகைகளைத் தொழுது ஒரு வியப்பூட்டும் அளவுக்கு மாற்றத்தை அவர் உணர்ந்தார். அல்லாஹ் என்னை நன்மையான பாதையில் நிலைநிறுத்துவதற்காக துஆ செய்யுமாறு ஒரு வேதனையுடன் கூறினார்.

துருக்கியைச் சேர்ந்த ஒரு இளைஞர் ஜெர்மன் மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் திரும்பிச் செல்லும் போது அவர் பைஅத் செய்ய மாட்டேன். எனக்கு சில குடும்பப் பிரச்சனைகள் உள்ளன என்றார். மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு மூன்றாவது நாள் காலை வரை அவர் பைஅத் செய்வதற்கு ஆயத்தமாக இல்லை. ஆனால் பைஅத் நிகழ்ச்சிக்கு முன்பு அவர் அதில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆனார். பைஅத் செய்த போதும் அதன் பிறகும் அவரது நிலைமை எவ்வாறு இருந்ததென்றால், அவர் அழுது கொண்டே இருந்தார். அவருடன் பேசுவது கஷ்டமாக இருந்தது. அவர் கூறினார்: பைஅத்தின் காட்சியைக் கண்டு என்னால் பொறுக்க முடியவில்லை. ஏதாவதொரு மறைவான சக்தி அவரை பைஅத் செய்ய வைத்தது.

இதனைப் போன்று நைஜர் நாட்டைச் சேர்ந்தவர் கூறுகின்றார்: நான் மாநாட்டிற்கு வருவதற்கு முன்பு பைஅத் செய்வதைக் குறித்து நினைத்துக் கூட பார்க்கவில்லை. ஆனால் நான் இங்கு வந்து மக்களிடம் தனது கலீஃபாவைப் பார்ப்பதற்கு எவ்வளவு துடிப்பு உள்ளது என்பதைப் பார்த்தேன். மக்களது உள்ளங்களில் தனது கலீஃபாவுக்கு எவ்வளவு அன்பு உள்ளது என்பதைப் பார்த்தேன். இந்த விசயம் எனது உள்ளத்தில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. பிறகு நான் பைஅத் செய்து இந்த ஜமாஅத்தில் இணைவேன் என முடிவு செய்தேன். ஆக அல்லாஹ் மக்களை சீர்திருத்தத்திற்கான பல்வேறு வழிகளைக் கையாளுகின்றான். எவ்வாறாயினும் அல்லாஹ்வின் அருளால் இந்த பைஅத்தில் 16 சமுதாயங்களின் 67 நபர்கள் பைஅத் செய்தனர். அதில் 48 ஆண்களும் 19 பெண்களும் இருந்தனர்.

இப்போது சுருக்கமாக ஏற்பாடுகள் சம்பந்தமாகக் கூறுகின்றேன். ஆரம்பத்தில் ஜெர்மனியில் மாநாட்டுத் திடலில் மெயின் ஹாலிலேயே அவர்களது M.T.A. வேனை நிறுத்துவார்கள். மொழியாக்கம் செய்ய கேபிள்களை அமைத்திருப்பார்கள். இம்முறை அதனை வெளியே நிறுத்தினார்கள். இதனால் சில மொழிபெயர்ப்புகளில் சப்தமும், இரைச்சலும் வந்து கொண்டிருந்தன. அது இடையூறாக இருந்தது. இன்சா அல்லாஹ் இதனை வருங்காலங்களில் இந்த பிரச்சனையை களைவதற்கு முயற்சி செய்வார்கள் என நம்புகின்றேன். இதனை அவர்கள் குறித்துக் கொள்ள வேண்டும். இதைப் போன்று பெண்கள் பகுதியில் ஒரு சில மொழிபெயர்ப்பிற்கான ஏற்பாடுகள் இருக்கவில்லை. அதனால் மொழிபெயர்ப்பு சமயத்தில் ஆண்களின் ஹாலில் வந்து அமர வேண்டியது இருந்தது. ஆனால் இக்காலத்தில் எப்படிப்பட்ட வசதிகள், ஏற்பாடுகள் வந்து

விட்டன என்றால் மொழிபெயர்ப்புக்கான ஏற்பாடு எல்லா இடங்களிலும் இருக்க வேண்டும். நடந்து கொண்டு கேட்கும் அளவிற்கு அது இருக்க வேண்டும். U.K.-வில் அதுபோன்று தான் உள்ளது. நீங்கள் எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாம்.

அடுத்து இம்முறை சவுண்டில் ஓரளவு முன்னேற்றம் இருந்தது. இருந்தும் ஓரளவு எதிரொலி இருந்தது. இதனால் ஜுமுஆவில் எனது குரல் சரியக கேட்கிறதா எனக் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏனென்றால் எனது குரல் திரும்பி வந்து கொண்டிருந்தது. எனவே இவைகள் சவுண்டு தொடர்பாகவும், ஏற்பாடுகள்

தொடர்பாகவும், மொழிபெயர்ப்பு தொடர்பாகவும் இருந்த சில குறைகள் ஆகும். ஜெர்மனி ஜமாஅத் இவற்றைக் களைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வின் அருளால் 3100 ஆண் பணியாளர்களும், 3700 பெண் பணியாளர்களும் பணியாற்றியுள்ளனர். அதற்கு முன்பு வகாரே அமலும் நடைபெற்று வந்தது. 100 முதல் 150 குத்தாம்கள் தினசரி 14 மணி நேரங்கள் வகாரே அமல் செய்து இந்த மாநாட்டின் ஏற்பாட்டை செய்துள்ளார்கள். முதன் முறையாக வகாரே அமல் செய்து இதில் எந்த அளவு அமைதியும் இன்பமும் உள்ளது என்பது தெரிய வந்துள்ளது. இன்சா அல்லாஹ் வருங்காலங்களிலும் கண்டிப்பாக கலந்து கொள்வோம் என பெரும்பாலார் எழுதியுள்ளனர்.

விருந்தினர் பிரிவும், கடந்த வருடத்தை விட இவ்வருடம் சிறப்பான ஏற்பாட்டைச் செய்திருந்தது. அதில் ஒன்று, சாப்பிடும் சமயத்தில் தண்ணீர் கிடைத்தது. சாப்பிடும் நேரத்திலும் தூரமாகச் சென்று தண்ணீர் கொண்டு வருவதற்குப் பதிலாக சாப்பாட்டு மேசையில் தண்ணீர் இருக்க வேண்டும் எனக் கூறியிருந்தேன். ஏனென்றால் இதுதான் நபி (ஸல்) அவர்களுடைய கட்டளையாகும். அதாவது சாப்பிடும் போது, தண்ணீரை தனது அருகில் வைத்துக் கொள்ளுங்கள் என்பதாகும்.

ரொட்டியின் தரமும் கடந்த வருடத்தை விட இவ்வருடம் சிறப்பாக இருந்தது. ஏற்பாட்டாளர்களும் இதனையே கூறினர். நானும் லங்கர் கானாவிற்குச் சென்று சுவைத்துப் பார்த்தேன். இதனைப் பற்றி மக்களுடைய கருத்து வரும்போது தான் இது அவர்களுக்கு பிடித்திருந்ததா? இல்லையா? என்பது தெரிய வரும். இருப்பினும் இம்முறை ரொட்டி சிறந்ததாக இருந்தது. தூய்மைக்கான ஏற்பாடும் இம்முறை சிறப்பாக இருந்தது. நுழைவுப் பாதையில் வைக்கப்பட்ட ஸ்கேனிங்கிலும் இவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்தி உள்ளனர். அல்லாஹ்வின் அருளால் சிறப்பான ஏற்பாடாக இருந்தது. எவ்வாறாயினும், ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், சிறுமிகளும் மாநாட்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தினர்களுக்குரிய சேவை செய்வதற்கான உரிமையைச் செலுத்த முயற்சிகளைச் செய்துள்ளனர். அல்லாஹ் இவர்களுக்கு நற்கூலியை வழங்குவானாக! வருங்காலங்களில் முன்பை விட அதிகமாக தொண்டாற்றுவதற்கான வாய்ப்பினை வழங்குவானாக! தூய்மையிலும் விசுவாசத்திலும் இவர்களை முன்னேற்றிக் கொண்டே செல்வானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH MOSQUE, London

on **05.07.2013**

Translated by : Maulavi S. ABDUL QADIR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456